# அழகப்பாபல்கலைக்கழகம்,காரைக்குடி

(தேசியத் தரநிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுமதிப்பீட்டில் A+ (CGPA : 3.64) தகுதிபெற்றது)

நாள் : 29.12.2017

காரைக்குடி அழகப்பாபல்கலைக்கழக தொழிலக வேதியியல் துறையில் பேராசிரியராக பணியாற்றிய முனைவர். ஹா. குருமல்லேஷ் பிரபு அழகப்பாபல்கலைக்கழகத்தின் புதிய பதிவாளராக 22.12.2017 அன்று பதவியேற்றுக் கொண்டார். இதற்கு முன்னர் இவர் அழகப்பா பல்கலைக்கழகத்தின் தேர்வாணையர் பொறுப்பிலும், தனி அலுவலராகவும் (திட்டம் மற்றும் வளர்ச்சி) பணியாற்றியவர். மோனாஷ் பல்கலைக்கழகம், மெல்பர்ன், ஆஸ்திரேலியாவில் 2007-ஆம் ஆண்டு முதுநிலை முனைவர் பட்ட ஆராய்ச்சியாளராக பணியாற்றியவர். மேலும், நியூசிலாந்து, செக்கோஸ்லோவாகியா, ஜெர்மனி மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு கல்விப் பணி மற்றும் ஆராய்ச்சி நிமித்தமாக சென்று வந்துள்ளார். இவர் சர்வதேச அளவில் 70 ஆராய்ச்சிகட்டுரைகளையும், தேசிய அளவில் 28 கட்டுரைகளையும் வெளியிட்டு, h குறியீட்டில் 14-வது இடத்தை பெற்றுள்ளார். 30 ஆண்டுகால கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி அனுபவம் பெற்றவர். பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் 2017-19-ஆம் ஆண்டிற்கான மத்தியதொழில் விருதினை (UGC Mid Career Award) பெற்றுள்ளார். அழகப்பா பல்கலைக்கழகத்தால் அமைக்கப்பட்ட பல்வேறு குழுக்களில் ஒருங்கிணைப்பாளராகவும், உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

அழகப்பாபல்கலைக்கழக நானோ அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் பேராசிரியர் முனைவர் பி. சக்திவேல் அழகப்பா பல்கலைக்கழக புதிய தேர்வாணையராக 21.12.2017 அன்று பதவியேற்றுக் கொண்டார். இவர் மின் வேதியியல் பாடத்தில் ஆராய்ச்சி மேற்கொண்டு அழகப்பா பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். ஆஸ்திரேலியா, ஜப்பான், மலேசியா, சிங்கப்பூர், தென் கொரியா, தைவான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு ஆராய்ச்சி நிமித்தமாக சென்று வந்துள்ளார். 20 ஆண்டுகள் கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி அனுபவம் பெற்றவர். சர்வதேச மற்றும் தேசிய அளவில் 58 ஆராய்ச்சி கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். மார்க்கியூஸ் என்பவர் பெயரில் அமைந்த உலகின் தலைசிறந்த விஞ்ஞானிகள் பட்டியலில் (Marquis Who's Who in the World") இவரது பெயரும் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

அழகப்பாபல்கலைக்கழக நிறுமச் செயலரியல் துறைப் பேராசிரியரும், முன்னாள் பதிவாளர் (பொறுப்பு) வகித்தவருமான முனைவர் வி. பாலச்சந்திரன் திட்டம் மற்றும் வளர்ச்சிப் பிரிவின் தனி அலுவலராகவும், அழகப்பா மேலாண்மை நிறுவனத்தின் பேரா. எஸ். ராஜாமோகன் கல்லூரி வளர்ச்சிக் குழும முதன்மையராகவும் பதவி ஏற்றுக் கொண்டுள்ளனர்.

பதிவாளர்

பேரா.ஹா. குருமல்லேஷ் பிரபு